பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

27 03 2025 — 7 15
வியாழக்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டில் வங்கித்துறையை வலுப்படுத்த பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
2. நாடு முழுவதும் கைத்தறி தொழில்களின் மேம்பாட்டிற்காக ஜவுளி அமைச்சகம் பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு பபித்ரா மார்க்ரேட்டா தெரிவித்துள்ளார்.
3. பஞ்சாப் மாநிலத்தில் வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளுக்கு வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் 14 ஆயிரத்து 524 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
4. உக்ரைனுடன் கடல்சார் போர் நிறுத்தம் செய்வதற்கு முன்பாக தங்கள் நாட்டின் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகளை நீக்க வேண்டுமென்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.
5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நிதேஷ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டில் வங்கித்துறையை வலுப்படுத்த பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், வங்கிகளில் நிதி நிலைமை ஸ்திரத்தன்மையுடன் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கிக் கடனை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

அமைச்சரின் பதிலுரைக்குப்பின் வங்கி சட்டங்கள் திருத்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது.

இதன் மூலம் ஒரு வங்கிக் கணக்குக்கு தற்போது ஒரு வாரிசுதாரர் நியமிக்கப்பட்டு வந்த நிலையில், நான்கு வாரிசுதாரர்களை நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

வங்கிகள் தங்களுடைய தணிக்கையாளர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் கைத்தறி தொழில்களின் மேம்பாட்டிற்காக ஜவுளி அமைச்சகம் பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு பபித்ரா மார்க்ரேட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நவீன உலகத்தரம் வாய்ந்த ஜவுளி உள்கட்டமைப்பை உருவாக்க பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறினார்,

ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டத்தின்கீழ் மேற்குவங்க மாநிலம் ஹவுராவில் ஆயத்த ஆடை பூங்கா, பின்னலாடை பூங்கா அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த திரு பபித்ரா மார்க்ரேட்டா, தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின் கீழ் 509 கோடி ரூபாய் மதிப்பிலான 168 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.,

இதன்மூலம் நாட்டில் ஜவுளி உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறந்த சூழலை உருவாக்க முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆயிரதது 500-க்கும் மேற்பட்ட போலியான செய்திகளை உண்மை கண்டறியும் குழு கண்டறிந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது குறித்த கேள்விக்கு பதிலளித்து பேசிய அவர், இது தொடர்பாக 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகள் பெறப்பட்டதாகக் கூறினார்.

இந்த கேள்விகள் தொடர்பாக பத்திரிகை தகவல் அலுவலகத்தில் உண்மை கண்டறியும் குழு ஆராய்ந்து சரியான தகவல்களை அதன் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்தார்.

அரசு தொடர்புடைய செய்திகள் குறித்த புகார்களை மக்கள் தெரிவிக்கலாம் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

பஞ்சாப் மாநிலத்தில் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

அம்மாநில நிதி அமைச்சர் திரு ஹர்பல் சிங் சீமா இரண்டு லட்சத்து 36 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பஞ்சாபில் வரி வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருவதாகக் கூறினார்.

வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளுக்கு 14 ஆயிரத்து 524 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இதனிடையே இந்த பட்ஜெட்டில் தவறான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக பஞ்சாப் பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திரு அஸ்வினி சர்மா குற்றம்சாட்டியுள்ளார்.

மாநிலத்தில் பொருளாதார நிலை மிக மோசமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்மாநில எதிர்க்கட்சித் தலைவர் திரு பிரதாப் சிங் பஜ்வா, இந்த பட்ஜெட்டில் இளைஞர்களுக்கான நலன்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று குற்றம்சாட்டினார்.

மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று ஷிரோண்மணி அகாலிதள் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக திருமதி ஹர்சிம்ரத் கவுர் பாதல் தெரிவித்தார்.

[]<<<>>>[]

உக்ரைனுடன் கடல்சார் போர் நிறுத்தம் செய்வதற்கு முன்பாக தங்கள் நாட்டின் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகளை நீக்க வேண்டுமென்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

கருங்கடலில் போர் நிறுத்தத்துக்கு ரஷ்யாவும் - உக்ரைனும் ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க அறிவித்துள்ள நிலையில், ரஷ்யா இவ்வாறு தெரிவித்துள்ளது.

ரஷ்ய வங்கிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கினால் மட்டுமே போர் நிறுத்தத்துக்கு தாங்களால் ஒத்துழைப்பு அளிக்க முடியும் என்று கூறியுள்ளது.

இதற்கிடையே உக்ரைன் நாட்டின் மைக்கோலைவ் துறைமுக நகரத்தின் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக சவுதி அரேபியாவில் ரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி பேச்சுக்களுக்குப் பின் உக்ரைனுடனான கடல்சார் போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வரும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது.

**[]<<<>>>[]**

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் தமிழகத்தின் மதுரை அலுவலகம் சார்பில் கரூரில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் படுக்கை விரிப்பு, தலையணை உறை உள்ளிட்ட பொருட்களின் தர நிர்ணயம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட இந்திய தர நிர்ணய அமைவனத்தின் மதுரை அலுவலக முதுநிலை இயக்குநர் திரு எஸ் டி தயானந்த், மக்கள் எந்த பொருள் வாங்கினாலும் பி ஐ எஸ் தரம் குறித்து அறிந்து வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.,

*( சவுண்ட்பைட் - தயானந்த் ) --- 48 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நாமக்கல் உள்ளிட்ட தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளில் எல் பி ஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் இன்று காலை ஆறு மணி முதல் வேலை நிறுத்தத்தை தொடங்கியுள்ளனர்.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள எல் பி ஜி டேங்கர் லாரி ஒப்பந்தத்தில் லாரி உரிமையாளர்கள் பாதிக்கப்படாதபடி ஒப்பந்த விதிமுறைகளை தளர்த்தி வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மருந்து கிடங்கில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீணை அணைத்ததால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

மருந்து கிடங்களில் பொருத்தப்பட்டுள்ள குளிர்சாதன பெட்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

உடனடியாக தீ அணைக்கப்பட்டதால் அருகில் உள்ள உள்நோயாளிகள் பிரிவுக்கு தீ பரவாமல் தவிர்க்கப்பட்டது.

எனினும் இந்த தீ விபத்தில் மருந்து மாத்திரைகள் எறிந்து சாம்பலானதாகவும், காவல்துறையினர் விசாரணை நடத்தி வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நிதேஷ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் ஒன்பது – பூஜ்ஜியம் என்ற புள்ளி கணக்கில் துர்க்மெனிஸ்தானின் **Amanberdi agamammedov**-ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா, அனகத்சிங், அபய் சிங் ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஜோஸ்னா சின்னப்பா 3-2 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய வீரரான ஆகன்ஷா சலூன்காவை வென்றார்.

இன்று நடைபெறவுள்ள அரை இறுதி ஆட்டத்தில் ஜோஸ்னா சின்னப்பா – அனகத்சிங்கை எதிர்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

குவாஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்தது.

152 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கொல்கத்தா 17 புள்ளி மூன்று ஓவரில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 153 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரர் குயிண்டன் டி-காக் 61 பந்துகளில் 97 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெறும் போட்டியில் ஹைதராபாத் அணி - லக்னோவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகிறது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பதக்கப்பட்டியலில் ஹரியானா 31 தங்கம் உட்பட 96 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது,

தமிழகம் 26 தங்கம், 17 வெள்ளி, 25 வெண்கலம் என மொத்தம் 68 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

***End of News***